முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1196

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.01.2023, சனிக்கிழமை

1. உலகமெங்கும் பசி பிணி விரட்டி
   உயிர்கொலை நீக்கி ஜீவதயவை வளர்க்கும் முகமாக
   வேலவன் என் சக்தியாக அவதாரம் புரிந்த
   வெற்றி நாயகனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் மார்கழி மாதம் 23 ம் நாள் 07.01.2023, சனிக்கிழமை)
   ஆற்றல்பட அரங்கன் உன் மார்க்கம் உலகமெங்கும் பரவ
   அகிலம் பிரளயம் பேரிடர் பிறதுன்பத்திலிருந்து விடுபட்டு
3. விடுபட்டு சர்வ பாதுகாப்பும் பெற்று
   வினவிட ஞானத்தலைமைகள் நிறைந்த
   கலகம் துன்பம் பிற இன்னல்கள் இல்லாத
   காப்புமிக்க ஞான பூமியாக மாற்றங்கண்டு
4. காண்டுமே ஆறுமுகன் என் வழிபாட்டின் சக்தியாகவே
   கலியுகம் ஞான யுகமாக மாற்றம் பெறும்
   தொண்டர்களாம் அரங்கன் சீடர்கள் நிறைந்த
   தூயஞானவான்கள் படை பெருக
5. பெருகவே ஞானத்தலைமை கூடி
   பேருலகமெங்கும் ஞான ஆட்சியாக மலரக்கூடும்
   ஆறுதலாக இந்த வித யுகமாற்றத்துக்கு
   அகிலத்தார் அரங்கன் ஓங்காரக்குடில் நோக்கி வந்து
6. வந்துமே அரங்கன் வழி சரணடைந்து
   வழிமொழிந்து அரங்கன் கொள்கைதனை
   சிந்தை ஏற்றி உலகமெல்லாம் பரப்ப
   செப்பிடுவேன் சடுதி உலகமெங்கும் மாற்றம் ஞான ஆட்சிக்காலமாக அமையக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–